1978 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திரு. அம்பிகாபதி அவர்கள் விதிகளை நன்றாகத் தெரிந்தவர்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, எழுதிக் கொடுத்தால் நீங்கள் அனுமதிக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைக் கூட இங்கே கேட்கக் கூடாது. பேரவைத் தலைவர் அனுமதி இல்லாமல் பேசக் கூடாது. பேரவைத் தலைவர் மீது களங்கம் கற்பிக்கக் கூடாது. அதைப்பற்றி நீங்கள் எழுதிக் கொடுங்கள்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்த நேரம் ஜீரோ அவர் மாதிரி 242-ன் கீழ் எழுப்புகிறார்கள். ஆனால் ஒழுங்குப் பிரச்னை என்பது திடீரென்று வருவது. அதை எழுதிக் கொடுங்கள் என்று சொன்னால் எங்களுக்கு ஆபத்து வந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :- பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது என்று சொல்லவில்லை. நீங்கள் உண்மையான பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணி இருப்பீர்கள், ஒத்துக் கொள்கிறேன். அதைப் பார்த்து மற்றவர்களும் நானும் பாயின்ட் ஆப் ஆர்டர், நானும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று தொடர்ந்து எழுப்புவதைத் தவிர்க்கலாம் என்பதற்காகத் தான் சொல்கிறேன். இந்த அவையின் நேரம் வீணாகக் கூடாது, உறுப்பினர்களுக்குள்ள உரிமையைப் பறிக்கவில்லை.

4. தகவல் கோரல்.

(அ) டெல்லி செல்லும் தமிழ் நாடு விரைவு ரயில் வண்டியில் தமிழிலும் அறிவிப்பு செய்வது குறித்து.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து டெல்லிக்குப் போகிற தமிழ்நாடு எக்ஸ்பிரசில் செய்தியும் அறிவிப்பும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் சொல்கிறார்கள். தமிழிலே சொல்ல வேண்டும் என்று நாங்கள் சென்றபோது கூட, பொது நிறுவனங்கள் குழுவில் சென்றபோது கூட, சட்ட மன்ற உறுப்பினர்கள் கருத்தைத் தெரிவித்தோம்.

ஆனால், அதற்கு எந்தவிதத் தகவலும் வரவில்லை. எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டு இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட மன்ற உறுப்பினர் யாரிடம் எழுதிக் கொடுத்தார் என்பது பற்றி எனக்குத் தகவல் இல்லை. இது பெரிய பிரச்சினை. அவையிலே அனைவரும் கூடி

முடிவெடுத்தால் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். இந்த விதியின் கீழ் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும், இந்த விதியின் கீழ் அவையை ஒத்திவைக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்வீர்களானால் அதைப் பற்றி விவாதிக்கலாம். பாயின்ட் ஆப் ஆர்டரே இப்பொழுது எழுப்ப வேண்டாம் என்று சொல்கிறேன். ஆனால், நீங்கள் பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று சொல்லுகிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள கேள்விகளுக்குப் பல மாதங்கள் ஆகியும் பதில் வராதது குறித்து.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தங்களிடம் இரண்டுமுறை தெரிவித்தேன். தங்கள் அறையிலேயும் தெரிவித்தேன். 11-7-1977 அன்று 3 கேள்விகள் கொடுக்கப்பட்டு 8 மாதங்கள் கடந்து விட்டன ஒரு கேள்விக்கும் பதில் வரவில்லை. கேள்விகளுக்கு இத்தனை நாட்களுக்குள் பதில் வரவேண்டும் என்று விதியிருக்கிறது. அப்படி விதி இருந்தும் இந்த 8 மாதங்களாகப் பதில் அனுப்பாத அதிகாரிகள் மீது தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஒரு கேள்விக்கு 42 நாட்களுக்குள் பதில் வரவில்லை என்றால் அதைப் பற்றி எழுப்புவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. அது ஏன் வரவில்லை என்று அமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் 42 நாட்களுக்குள் பதில் தெரிவித்துவிட்டால் நல்லது. பல கேள்விகளுக்கு 4, 5 மாதங்கள் ஆகியும் பதில் வரவில்லை. அவைகளைத் துரிதப்படுத்தி சீக்கிரமாகக் கொடுப்பதற்கு நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

(இ) ஒத்திவைக்கப்பட்ட வினாக்கள் மீண்டும் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : 11—3—1978-ஆம் தேதி அன்று மருத்துவத்துறை சம்பந்தமாகக் கேள்விகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு வந்த கேள்விகளுக்குப் பதில் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக் கேள்விக்களுக்குப் பதில் சொல்லவில்லை. அவைகளுக்கு எப்போது பதில் சொல்லப்படும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, அவர்களுக்கு வேறு பிரச்சினைகள் இருக்கிற காரணத்தால் ஒத்தி வைக்கப் பட்டுள்ளன, அந்தக் கேள்விகள் கட்டாயம் வரும். வராமல் போகாது. அமருங்கள். அமருங்கள்.